06.08.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.137/2017**

**பி.வா.சா. 1–பானுமதி, க/பெ.கிருஷ்ணசாமி**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அழகிரிசாமி நாயுடு, ராமசாமி நாயுடு ஆகிய குடும்பத்திற்கு நான் அன்னியர் என்று சொன்னால் சரிதான். சந்திரசேகர் எனக்கு எழுதிக்கொடுத்த கிரையாவணம் பி.வா.சா.ஆ.8 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்த வீட்டுவரி, குடிநீர் வரி ரசீதுகள் வா.சா.ஆ.16, வா.சா.ஆ.17, வா.சா.ஆ.19, வா.சா.ஆ.20 ஆகிய ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லை என்று சொல்லியுள்ளேன், எனவே இந்த ஆவணங்கள் எந்த சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.8 கிரையாவணம் எழுதுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் சரிபார்த்தேன் என கூறியுள்ளேன், அவ்வாறு நான் சரிபார்த்த வில்லங்க சான்றிதழில் சரோஜா ஈடு வைத்ததாக குறிப்பு

காணப்படவில்லை என்றால் சரிதான். சரோஜா வாங்கிய பிறகு தான் ஈடு வைத்தார். தாவா சொத்தை எந்த ஆண்டு பிரித்து கொண்டார் என்றால் அசல் வழக்கு எண்.71/1985 என்ற வழக்கின் தீர்ப்பின் படி தாவா சொத்தை அழகிரி நாயுடு, ரெங்கராஜ் நாயுடு பிரித்து கொண்டார்கள். எனவே தாவா சொத்தை கிழக்கு மேற்காக நீதிமன்றம் மூலமாக தான் அசல் வழக்கு தீர்ப்பின் படி பிரித்து கொண்டார்கள். அந்த அசல் வழக்கு எண்.71/1985 வழக்கின் தீர்ப்பாணையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ரெங்கராஜோ அல்லது அவருடைய வாரிசுகளோ ஒரு நாளும் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தில் உள்ள வீட்டின் மேல்புற வீட்டை நான் பிரித்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. கொரோனா காலத்தில் சந்திரசேகர் தான் பிரித்தார். சந்திரசேகர் அவ்வாறு பிரித்தார் என்றால் அவருடைய சொத்தான என்றால் அவருடைய சொத்து தான். சந்திரசேகர் பத்திரம் எழுதிய பிறகு பிரித்தாரா என்றால் பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு தான் பிரித்தார்.

வாதிகள் இவ்வழக்கில் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்த பிறகு தான் தாவா சொத்தில் உள்ள ஓட்டுவில்லை நான் பிரித்தேன் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி மீண்டும் நானும், சந்திரசேகரும் சேர்ந்து தான் பிரித்தோம் என்று கூறுகிறார். இவ்வாறு தாவா சொத்தில் உள்ள ஓட்டை நான் தான் இதற்கு முன் பிரிக்கப்பட்டதா என்றால் கொரோனா காலத்தில் பிரித்தோம். சந்திரசேகனிடம் தாவா சொத்தில் உள்ள ஓட்டை கொரோனா காலத்திற்கு முன்பு பிரித்து கொடுக்க சொன்னேன், ஆனால் சந்திரசேகர் பத்திரம் எழுதிய பிறகு கொரோனா காலத்திற்கு பிறகு அவ்வாறு ஓட்டை பிரித்தார். வாதிகளை நான் தாவா குடும்ப சொத்திலிருந்து அன்னியரான நான் பாக வழக்கை தாக்கல் செய்து தான் வெளியேற்ற முடியுமே தவிர பலாத்காரமாக வாதிகளை வெளியேற்ற உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே தான வாதிகள் சட்டப்பூர்வமாக இன்றி வெளியேற்றக்கூடாது என உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கு திசையில் உள்ள இடம் என் மகள் இடம் என்றால் சரிதான்.

06.08.2025



என்னுடைய மகள் இந்த கிழக்கு திசையில் உள்ள சொத்தை வெள்ளாளர் இனத்தை சார்ந்தவரிடம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். தாவா இடத்திற்கு மேற்கு திசையில் உள்ள இடத்தை நான் ஏற்கனவே வாங்கிவிட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு திசையில் எங்கள் குடும்பத்திற்கு நிலம் உள்ளதால் நடுவில் உள்ள தாவா சொத்தை கைப்பற்றுவதற்காக முயற்சி செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வடபுற பாகத்திலிருந்து தென்புற பாகத்திற்கு செல்ல நடுவில் திறப்பு வாசல் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் தென்புற சுவற்றில் இரண்டு வாசற்படி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் மேல்புற வாசலில் ஒட்டி கழிவறை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் மேல்ஹற வாசலில் ஒட்டி ஒரு திண்ணை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் மேல்புற வாசலில் திண்ணையை ஒட்டி குளியலறை உள்ளது என்றால் அங்கு குளிப்பார்கள். நான் சொல்வது போன்று தாவா சொத்தில் அழகிரிசாமி நாயுடு, ரெங்கராஜ் நாயுடுவுக்கு

06.08.2025



இருவாசற்படி உள்ளது என்று சொல்வது தவறு, கட்டிட அமைப்பு படி ஒரு வாசற்படி தான் அதன் அருகாமையில் குளியலறை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி நான் கிரையம் பெற்ற ஆவணத்தின் மூலமாக எனக்கு உரிமை கிடைத்தால் நீதிமன்றத்தின் வாயிலாக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும், மாறாக வாதிகளை தாவா சொத்தில் வெளியேற்ற முடியாது என்று சொன்னால் சரியல்ல, வாதி கோரியப்படி தாவா தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.